| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | | |
|---|---|---|
| முதலாம் தவணைப்பரீட்சை - 2019 | | |
| தரம் - 07 | சைவநெறி | நேரம் : 2 மணித்தியாலம் |

## பகுதி I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) நாம் முதலில் வழிபட வேண்டிய தெய்வம்.
   1. விநாயகர் 2. முருகன் 3. சிவபெருமான் 4. திருமால்

2) ஏடுதொடக்கல் இடம்பெறும் நாள்.
   1. மாசிமகம் 2. வைகாசி விசாகம் 3. விஜயதசமி 4. சதுத்திதினம்

3) மனிதன் மனிதனாக வாழ வழிவகுப்பது.
   1. பணம் 2. சமயம் 3. பதவி 4. புகழ்

4) இந்துக்களின் புனித நாள்.
   1. வெள்ளிக்கிழமை 2. திங்கட்கிழமை
   3. வியாழக்கிழமை 4. சனிக்கிழமை

5) தேவார ஏடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம்.
   1. சீர்காழி 2. தில்லைச்சிற்றம்பலம்
   3. திருவாரூர் 4. திருநாரையூர்

6) மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களில் மிக முக்கியமானது.
   1. முன் வரிசையில் இருத்தல் 2. நண்பர்களாயிருத்தல்
   3. நேரந் தவறாமை 4. முறைப்பாடு கூறல்

7) மூதாட்டி வீடு செல்ல முடியாமல் பெருக்கெடுத்த ஆறு.
   1. கோதாவரி 2. காவிரியாறு 3. கங்கை ஆறு 4. வைகையாறு

8) பணிவு இல்லாமைக்கு முக்கிய காரணம்.
   1. அறியாமை 2. புகழ் 3. உயர் பதவி 4. பணம்

9) ‘‘கிருகப் பிரவேசம்’’ என்பது,
   1. ருதுசாந்தி விழா 2. புதுமனைப் புகுவிழா
   3. தைப்பொங்கல் விழா 4. திருமண விழா

10) ஏகநாதார் ஒரே நாளில் 108 தடவை நீராடிய ஆறு.
   1. கோதாவரி 2. கங்கை 3. யமுனை 4. காவேரி

11) எமது முன்னறி தெய்வங்களாக விளங்குபவர்கள்.
   1. அண்ணா, அக்கா 2. தம்பி, தங்கை
   3. தாய், தந்தை 4. ஆசிரியர், முதியோர்

12) சகோதரத்துவத்திற்கு எழுத்துக் காட்டாக விளங்கியவர்.
   1. தருமர் 2. இராமர் 3. இலக்குமணன் 4. கும்பகர்ணன்



kalvi.lk

13) “மாலும் அயனும் காணாத நீதியே” எனக் கூறியவர்.
   1. மாணிக்க வாசகர்   2. சுந்தரர்
   3. அருணகிரிநாதர்   4. கம்பர்

14) “மனு நீதிகண்ட சோழன்” என்ற பெயரையுடைய மன்னன்.
   1. இராராஜ சோழன்   2. அநபாயச் சோழன்
   3. குலோத்துங்க சோழன்   4. இராஜேந்திரச் சோழன்

15) “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்” எனக்கூறும் நூல்.
   1. கந்தபுராணம்   2. நாலடியார்   3. லிங்கபுராணம்   4. பெரியபுராணம்

16) தீவினைகளைத் தவிர்க்கும் ஆற்றல் பெற்றோர்.
   1. பிறரை அடக்கியாள்பவர்   2. இறைபக்தியுள்ளவர்.
   3. பணபலம் உள்ளவர்கள்   4. பெரிய பதவியில் உள்ளோர்

17) இராமர் கங்கையாற்றைக் கடக்க உதவிய வேட்டுவத் தலைவன்.
   1. சுக்கிரீவன்   2. நாகன்   3. காடன்   4. குகன்

18) நாவுக்கரசர் கைலைக் காட்சியைக் கண்ட இடம்.
   1. திருவாரூர்   2. திருக்காளத்தி   3. திருவையாறு   4. சிதம்பரம்

19) “நிரைகழல் அரவம்” என்ற தேவாரத்தின் பண்.
   1. காந்தாரம்   2. பழம் பஞ்சுரம்   3. நட்டராகம்   4. புறநீர்மை

20) நன்றி மறவாமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய இருவர்.
   1. இராமன், இராவணன்   2. இராமன், இலக்குமணன்
   3. கர்ணன், கும்பகர்ணன்   4. தருமன், வீமன்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

**1) பின்வரும் தேவாரங்களுள் இரண்டினைப் பிழையற எழுதுக. பாடியவர் பெயரையும், பாடப்பட்ட தலத்தையும் தருக.**

1. நிரைகழலரவம் ....
2. மாதர்ப்பிறைக் கண்ணியானை ...
3. விருது குன்றமா .....
4. நங்கடபம்பளை ... ( 7 + ½ + ½ = 8)

(8 x 2 = 16 புள்ளிகள்)

**2) "ஒழுக்கம் விழும்பம் தரும்".**

1. பாடசாலையில் கொண்டாடப்படும் சைவசமயம் சார்ந்த விழாக்கள் 3 தருக.
2. மாணவர்கள் எவ்வாறு பாடசாலைக்குச் சமுகமளிக்க வேண்டும்.
3. பாடசாலையில் காலைப் பிராத்தனையில் பங்குபற்றவோர் யார்?
4. திருச்சிற்றம்பலம் சொல்லப்படுவதன் காரணம் யாது? (2+3+3+3 = 11 புள்ளிகள்)

**3) "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்".**

1. மூதாட்டி வாழ்ந்த ஊர் எது?
2. மூதாட்டி செய்த இறை தொண்டு யாது?
3. திருச்சிராப் பள்ளியில் உள்ள இறைவனுக்குத் தாயுமானவர் எனப்பெயர் வரக் காரணம் யாது?
4. தாயுமானவர் கதையினுடாக பெற்றுக் கொள்ளும் படிப்பினைகள் 3 தருக.

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

**4) "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**

1. ஒழுங்கைப் போதிக்கும் நிலையங்களாக விளங்குபவை எவை?
2. நேரத்திற்குப் பாடசாலைக்கு வருவதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக.
3. மாணவர்கள் பாடசாலையில் யாருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும்?
4. மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் 3 தருக. மாணவர்கள் விலக்க வேண்டிய குணங்கள் 3 தருக. (2+2+3+3 = 11 புள்ளிகள்)

**5) "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து"**

1. விழுமியம் என்றால் என்ன?
2. விழுமியங்கள் 6 தருக.
3. நன்றி மறவாமை தொடர்பான கூற்றுக்கள் 3 தருக.
4. அரசன் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த போது முனிவரால் இராச குமாரனுக்கு இடப்பட்ட கட்டளைகள் 3 தருக. (2+3+3+3 = 11 புள்ளிகள்)

**6) வீடொன்றைக்கட்டி வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் உள்ளது.**

1. வீடு கட்டும் விதியைக் கூறும் நூல் எது?
2. புதுமனை புகுதல் என்றால் என்ன?
3. அத்திபாரமிடும் போது அதனுள் இடும் பொருட்கள் எவை?
4. புதுமனைப் புகுவிழாவன்று கோயிலில் இருந்து கொண்டு வரும் பொருட்கள் எவை?

(2+3+3+3 = 11 புள்ளிகள்)



kalvi.lk

7) **“இனி நாம் ஐவரானோம்”**

1. மேற்கூறப்பட்ட கூற்று யாரால் கூறப்பட்டது?
2. பொறுமைக்கு உதாரணமாகத் திகழ்ந்தோர் பெயர் 3 தருக.
3. சகோதரத்துவத்தை வளர்க்க நீர் யாது செய்வீர்?
4. பஞ்சமா பாதகங்கள் எவை? (2+3+3+3 = 11 புள்ளிகள்)

Education கல்வி அധ്യාපන



kalvi.lk


தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education
கல்வி
අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457